# தி.மு.க.வின் பவளவிழா நிறைவு ஆண்டு:

# ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கத்தின் நெடும் பயணம் 5

நேற்றைய தொடர்ச்சி...

ஜெயலலிதாவின் பதவிப் பித்துச் சட்டமன்றத் தேர்தலை எதிர் நோக்கி இருந்தது. தேர்தல் நாள் 1991 மே 26-ஆம் தேதி என்று அறிவிக்கப்பட்டது. மே 21-ஆம் தேதி இராஜீவ் காந்தி திருப்பெரும்புதூருக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தார். பொதுக்கூட்டத்தின் வரவேற்பு நிகழ்வின்போது இரவு அவர் படுகொலை செய்யப்பட்டார். அவர் படுகொலை செய்யப்பட்டதற்குக் காரணம் தி.மு.க.தான் எனும் வதந்தி ஒரே விதமாகத் திருத்தணி முதல் கன்னியாகுமரி வரை பரப்பப்பட்டது.

கழகத் தோழர்கள் தாக்கப்பட்டனர். கழகத் தேர்தல் அலுவலகங்கள் தீயிடப்பட்டன. கழகத்தவர் சொத்துகள் அடித்து நொறுக்கப்பட்டன. 'முரசொலி' அலுவலகமும் கடுமையான தாக்குதலுக்கு இலக்காயிற்று. இதனால் ஒரு நாள் இதழ் வெளியிடப்படவில்லை. இராஜீவின் படுகொலை தி.மு.க.வின் தேர்தல் வெற்றியைப் பாதிக்கும் என்பது நன்றாகத் தெரிந்தது.

இருப்பினும் கலைஞர் துணிவாகத் தேர்தல் பரப்புரையைத் தொடங்கினார். முதலில் சட்டமன்றத் தேர்தல் மே 26-ஆம் தேதி என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. அதனை இராஜீவ் படுகொலைக்குப் பிறகு ஜூன் 15-ஆம் தேதிக்கு மாற்றி வைக்கப்பட்டது.

தேர்தல் நடந்தது. கலைஞர் மட்டுமே துறைமுகத் தொகுதியிலிருந்து ஒற்றை உறுப்பினராகத் தி.மு.க. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டார். தி.மு.க.வுக்கு வழக்கமாகக் கிடைக்க வேண்டிய வாக்குகளை விட 12 சதவிகிதம் குறைந்தது. தி.மு.க. மொத்த வாக்குகள் என 75 இலட்சத்தைப் பெற்றது.

மக்களை அச்சம் கவ்விக் கொண்டது. விளைவு ஜெயலலிதா 1991 ஜூனில் முதல்வரானார். ஆம்; தமிழகம் மீண்டும் இருட்டில் தள்ளப்பட்டுவிட்டது. கலைஞர் தோற்றுவிட்டார் என்பதை ஒப்புக் கொண்டார். 'நாம் வெற்றிகளை இழந்தோம் வெற்றிக்கான களங்களை இழக்கவில்லை' எனக் கழகத்தோழர்கள் நெஞ்சுயர்த்தி கலைஞரின் பின்னே தொடர்ந்தனர்.

முதன் முதலாகக் கலைஞர் ஈழத் தமிழர்களுக்காகச் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகினார். இரண்டாம் முறையோ தாய் நாட்டுத் தமிழர்களின் அச்சத்திற்கு ஆட்பட்டு அவர்களின் 'சுதேசியமான' இயக்கத்தைப் புறக்கணித்து விட்டார்களே என்பதற்காகப் பதவியிலிருந்து விலகினார். ஆக, அவர் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகி இருக்கிறார்.

தேர்தலின் போதே எழும்பூர் தொகுதி வேட்பாளர் மரணம் அடைந்து விட்டார். அந்தத் தொகுதி 'காலி'யாக இருந்தது. கலைஞர் துறைமுகம் தொகுதியிலிருந்து விலகியதற்குப் பிறகு அதுவும் 'காலி' ஆயிற்று. இந்த இரண்டு தொகுதிகளிலும் தேர்தல் நடைபெற்றது. எழும்பூரிலிருந்து பரிதி இளம்வழுதியும், துறைமுகத்திலிருந்து அ.செல்வராசனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1991-இல் தி.மு.க.வுக்குச் சட்டமன்றத்தில் இப்படி வெற்றி பெற்ற இரண்டு உறுப்பினர்களே இடம் பெற்று இருந்தனர். எதிர்க்கட்சி என ஒரு கட்சியைச் செயல்படுத்த முடியாத அளவுக்கு தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தி விட்டன.

அப்போது முதல்வர் ஜெயலலிதா தெரிவித்த கருத்து என்ன தெரியுமா? பெரிய ஜனநாயகவாதியைப் போல, 'எதிர்க்கட்சிகள் இல்லாத நிலையைப் பத்திரிகைகள் போக்க வேண்டும்' என்று கூறினார்.

தி.மு.க. சட்டமன்றத்தில் இரண்டு இடங்களிலும், நாடாளு மன்றத்தில் ஓரிடத்தில் கூட இல்லாத நிலை 1991-இல் ஏற்பட்டு இருந்தது.

**கலைஞர் சட்டமன்ற உறுப்பினராக இல்லாமலேயே 1991-1996 கட்டத்தில் கட்சியை இயக்கினார். பரிதி. இளம்வழுதி ஒற்றைக் குரல் மனிதராகச் செயல்பட்டார். அவரைப் பாராட்டி கலைஞர் 'முரசொலி'யில் எழுதினார்.**

**சுருக்கமாகச் சொல்வதானால் சட்டமன்றத்திற்கு வெளியே கலைஞர், உள்ளே பரிதி இளம்வழுதி என்று இருவரும் பணியாற்றினர். கலைஞரின் பணி பிரமிக்கத்தக்கதாய் இருந்தது.**

கலைஞர் சட்டமன்றத்தில் இல்லாத நிலையில் (1991-1996) 1992-ஆம் ஆண்டு ஏப்ரலில் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் அங்கே நடைபெற்றன. **(1) கழகப் பேச்சாளர் வெற்றிகொண்டான் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார்கள்.(2) 'முரசொலி' ஆசிரியர் செல்வத்தை சட்டமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு சபாநாயகர் உத்தரவிட்டார். இந்த ஜனநாயக விரோதப் போக்குகளைக் கலைஞர் வெளியிலிருந்தே எதிர்கொண்டார்.**

'முரசொலி'யின் ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான தீர்மானத்தை அப்போது அவை முன்னவராக இருந்த நாவலர் இரா.நெடுஞ்செழியன் முன் மொழிந்தார். அதற்கான தீர்ப்பைப் பேரவைத் தலைவர் 1992 ஏப்ரல் 27-ஆம் தேதி வழங்கினார்.

**இது குறித்து முரசொலி செல்வம் விளக்கம் அளித்து பேரவைத் தலைவருக்கு கடிதம் எழுதினார். அதில், அவர் இந்தத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு செல்லவிருப்பதால் 27.04.1992-இல் பேரவையில் ஆஜராக முடியாது. - இதை பேரவையை அவமதித்ததாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று குறிப்பிட்டு இருந்தார். எனினும் பேரவைத் தலைவர் முரசொலி செல்வத்தையும், கோவை மாலைமுரசு ஆசிரியர் சுந்தரையும் ஆஜர்படுத்துமாறு காவல் துறைக்கு பிடிவாரண்ட் பிறப்பித்தார். இதன் பிறகு ஒரு குறிப்பிட்ட நாளில் முரசொலி செல்வம் சட்டமன்றத்தில் ஆஜர் ஆனார். இப்படி ஜெயலலிதா 'ஜனநாயக சர்வாதிகாரியாக' தன்னை வெளிப்படுத்திக் கொண்டார்.**

தி.மு.க. இவற்றையெல்லாம் சந்தித்துக் கொண்டே முன்னேறியது. 1992 டிச.6-ஆம் தேதி இந்திய வரலாற்றில் ஒரு மோசமான நாள். பாபர் மசூதியை இடிப்பதற்காக - 'கரசேவை' என்ற பெயரால் ஒரு நடவடிக்கையை அறிவித்து விஸ்வ இந்து பரிஷத்தினர் பணியைத் தொடங்கினர். அப்போது பிரதமர் நரசிம்மராவ் இருந்தார்.

ஏன் இப்படி பாபர் மசூதியை இடிக்க வேண்டும் என்றால் - பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் இருந்தது. அதை அப்புறப்படுத்திவிட்டு அங்கேதான் பாபர் மசூதி கட்டப்பட்டது. ஆகவே அதனை இடிக்கிறோம் என்பது வி.எச்.பி. காரர்களின் வாதமாக இருந்தது. இதில் துளிகூட உண்மை இல்லை.

ஆனால் வரலாறு என்ன சொல்கிறது? கோயில் அங்கு இல்லை. அக்பர் ஆட்சியின் போது எழுதப்பட்ட துளசி தாசரின் எழுத்துகளில் கூட ஒரு கோயில் இருந்ததாகக் குறிப்பிடவில்லை. சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குருநானக் 1539வரை வாழ்ந்து இருக்கிறார். அவரும் கோயிலை இடித்து விட்டு மசூதியை எழுப்பியதாகக் கூறவில்லை. ஜெயலலிதா கரசேவையை ஆதரித்தார். மசூதியும் அப்படியே இருக்க வேண்டும் என்றார். எங்கே பேசினார், ஜெயலலிதா? ஒருமைப்பாட்டுக் குழுவில்! இதனைக் கலைஞர் அம்பலப்படுத்தினார்.

ஜெயலலிதா - இந்திரா காங்கிரஸ் உறவு முறிந்தது. பா.ஜ.க. தலைவர்களோடு ஜெயலலிதாவின் சந்திப்பு நிகழ்ந்தது. ஒருமைப்பாட்டுக் குழுவில் ஜெ. - பேச்சு குறித்து வி.எச்.பி. தலைவர்கள் பாராட்டித் தந்தி அனுப்பினர். இப்படி பாபர் மசூதி இடிப்பிற்கு ஆதரவு அளித்தவர்தான் ஜெயலலிதா.

டிச.6/1992 மாலை 5:00 மணிக்குள் பாபர் மசூதி இடிக்கப்பட்டு விட்டது. மாநில அரசு பாதுகாப்போடு நடைபெற்றது. மத்திய அரசு வேடிக்கைப் பார்த்தது. பாபர் மசூதி இடிப்பு நிறைவேறிவிட்டது.

இது குறித்து கலைஞரிடம் கருத்துக் கேட்டனர். அப்போது அவர், உச்சநீதிமன்றத்தில் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக மசூதி இடிக்கப்படவும், அதனால் நாட்டில் பெரும் கலவரம் ஏற்படவும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மாண்டிடவும் உத்தரப் பிரதேசத்தில் ஆட்சியில் இருந்த பா.ஜ.க. அரசு காரணமாக இருந்தது. எனவே அந்த மாநில அரசைக் கலைத்ததற்கு நியாயம் கற்பிக்க முடியும்.

ஆனால் பாரதீய ஜனதா என்ற அரசியல் கட்சி தடை செய்யப்படாத நிலையில் அந்தக் கட்சி ஆண்டு கொண்டு இருந்த மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், இமாசலப்பிரதேசம் ஆகிய மாநில அரசுகளை அரசியல்




சட்டத்தின் 356-ஆவது பிரிவைப் பயன்படுத்திக் கலைத்ததைத் தி.மு.க. ஏற்றுக் கொள்ள இயலாது" என்று கூறினார். எப்படியோ பா.ஜ.க.வினர் பாபர் மசூதியை இடித்துவிட்டு ஒரு நியாயத்தை செய்ததைப் போல மார்தட்டிக் கொண்டனர்.

1993 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கழகப் பொதுக்குழு, அன்பில் மரணம், கோவையில் கழகத்தின் 7-ஆவது மாநில மாநாடு எனக் கழகப் பணிகளில் தொய்வில்லாமல் நடந்து கொண்டு இருந்தன. மாநில மாநாடு வெற்றி மாநாடாக அமைந்தது.

1993 அக்டோபரில் கழகத்தின் 4-ஆவது பிளவு உருவாயிற்று. 1994 மே மாதம் முடிவுக்கு வந்தது. ஆனாலும் பரப்புரையில் இந்தப் பிளவினைக் கடுமையாக எதிர்த்துப் போராடினார் கலைஞர். சட்டத்துறைப் போராட்டமும் நடந்தது. தி.மு.க. அதனையும் கடந்தது.

தமிழகச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் என்று ஏதும் இல்லாததால் முதல்வர் ஜெயலலிதா அளவுக்கு மேல் ஆடினார். கரசேவை என்று பா.ஜ.க.வை ஆதரித்தார். இந்திரா காங்கிரஸ் பாபர் மசூதி இடிப்பின்போது நடந்து கொண்ட முறைகளையும் விமர்சனம் செய்



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

தார். பா.ம.க.வுடன் இந்திரா காங்கிரஸ் உறவு வைத்துள்ளதையும் சாடினார் ஜெயலலிதா.

ஆக, பா.ஜ.க., காங்கிரஸ் போன்ற தேசியக் கட்சிகளை அவர் நோக்கம் போல விமர்சனம் செய்து வந்தார். இவரது பாணியும் எம்.ஜி.ஆரைப் போலவேதான் இருந்தது.

தஞ்சை பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி தமிழகத்தில் இருந்து வரும் 69 சதவிகித இட ஒதுக்கீடு நீடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி சென்னை மாநகரில் 23.04.1994-இல் சமூக நீதிப் பேரணி நடத்தப்பட்டது. பேரணி ஓர் இடத்தை கடக்க ஐந்து மணி நேரமாயிற்று.

பேரணியில் தமிழகம் முழுவதும் திரண்டு வந்து கலந்து கொண்டனர். பேரணியின் முடிவில் கடற்கரையில் கூட்டம் நடைபெற்றது. அதில் கலைஞர், பேராசிரியர், கழக முன்னணியினர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

உச்சநீதிமன்றம், மாநில அரசுகளை மத்திய அரசு கலைத்தது செல்லாது என ஒரு தீர்ப்பை வழங்கியது. இந்தத் தீர்ப்பு 11-02-1994-இல் வழங்கப்பட்டது. மாநில அரசுகளை கலைப்பதற்கான முடிவு மேற்கொள்வதற்கு முன்பு நாடாளுமன்றத்தில் அது குறித்து விவாதித்து ஒப்புதல் பெற்ற பிறகே அச்செயலில் ஈடுபட வேண்டும் என அந்தத் தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டு இருந்தது. இதைக் கலைஞர் வரவேற்றார்.

ஜெயலலிதா ஆட்சி (1991-96) யின் போது தமிழக காங்கிரஸ் தலைவராக வாழப்பாடி ராமமூர்த்தி இருந்தார். அவர் உட்பட 7 கட்சி தலைவர்கள் 38 ஊழல் புகார் அடங்கிய மகஜர் ஒன்றை ஆளுநர் சென்னா ரெட்டியிடம் வழங்கினர். ஜெயலலிதா முதல் கட்ட ஆட்சியில் ஊழலில் திளைத்தார். இந்த ஊழல் பட்டியலை பிரதமர் நரசிம்மராவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

1994 மே 12-ஆம் தேதி கழகப் பொருளாளர் சாதிக் பாட்சா இயற்கை எய்தினார்.

அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி தவறான தகவல்களைத் தந்து ஒரு புத்தகத்தை ஆங்கிலத்தில் தேர்தல் கமிஷனராக இருந்த டி.என்.சேஷன் எழுதினார். இது குறித்து கலைஞர் ஒரு வழக்குத் தொடர்ந்து இருந்தார். இறுதியில் புத்தகத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் 19.12.1994 இல் சென்னை மருத்துவமனை ஒன்றில் தமது 95 ஆவது வயதில் காலமானார்.

சென்னை மெரினாவில் உள்ள காவல் துறை அலுவலகத்தை இடித்துவிட்டு ஜெயலலிதா புதிதாகக் கட்ட விரும்பினார். பாரம்பரியமான அந்தக் கட்டத்தை இடிக்கக் கூடாது என்று உயர் நிதிமன்றத்தில் தடை பெறப்பட்டது.1996 இல் வந்த கழக ஆட்சி அரசின் உத்தரவை இரத்து செய்தது.

1995-இல் ஜனவரி மாதம் தஞ்சையில் உலகத் தமிழ் மாநாடு நடந்தது. ஜெயலலிதா ஆட்சி மிக மோசமாக நடத்திய மாநாடு இது. கலைஞர் இதைப் பற்றி ஒரு நூலே எழுதலாம் என்று குறிப்பிட்டிருந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். தமிழ் மீது அவ்வளவு பற்றுள்ளவர் ஜெயலலிதா! அரசுப் பணத்தை வீணாக்கினார். அவரது ஆதரவு ஏடுகள் கூட அவரது செயல்களை வரவேற்கவில்லை.

1996 செப் - அக். மாதங்களில் மேயர் தேர்தல் நடைபெற்றது. மு.க.ஸ்டாலின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதேபோல மாநகராட்சிகளில் நமது தோழர்களும் கூட்டணி கட்சிகளும் மேயர் தேர்தலில் வெற்றி பெற்றனர்.

அக்டோபர் 3-ஆம் தேதி சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் மறைந்தார். அவரது அருமை பெருமைகளைக் கலைஞர் நினைவு கூர்ந்தார். முக்கியத் தலைவர்கள், இலக்கியவாதிகள், நாடகத் திரையுலகக் கலைஞர்கள், சமூகத்தில் உயர்வு பெற்று புகழடைந்து இருந்தவர்கள் என எவர் மறைந்தாலும் கலைஞர் இரங்கல் குறிப்பை வரைவார். அதுவே ஓர் இலக்கியமாய்த் திகழும்.

**தி.மு.க. மாநாடு - மாநில 8-வது மாநாடு 1996-ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாகவே நடைபெற வேண்டும் என்று கழகம் கருதியது. இம்மாநாடு நடைபெறுகிறபோது சட்டமன்ற, நாடாளுமன்றத்தில் கழகத்திற்குரிய எண்ணிக்கை பலமில்லை. ஆனால் மாநாடு நடத்த தேர்வு செய்த நிலத்தின் பரப்பரளவு நான்கரை இலட்சம் சதுர அடி. மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் கே.என்.நேரு - அவர்தான் மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவர்.**

**மூன்று நாள்கள் நடந்த மாநாடு அது! மாநாட்டுப் பந்தல் - அமைப்பு வேலைகள் நடந்தபோது கலைஞர் 7 முறை வந்து பார்வையிட்டுச் சென்றார். அப்போது 'இந்தியா டுடே' எழுதியது எம்மைப் பெரிதும் ஈர்த்தது.**

**"திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்னொரு பெயர் ஃபீனிக்ஸ் பறவை, இடையில் இரண்டு ஆண்டுகள் போக, கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் அரியணையே பார்க்காத கட்சி, இரண்டு முறை பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்ட கட்சி, நான்கு பிளவுகளைச் சந்தித்த கட்சி, வேறொரு கட்சியாக இருந்திருந்தால் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும். ஆனால் தி.மு.க. இதிலிருந்து எல்லாம் மீண்டு எழுந்து தமிழக அரசியல் அரங்கில் அசைக்க முடியாத கட்சியாகவே இருந்து வருகிறது.**

**இந்த மாநாட்டின் மக்கள் திரள் தன்னெழுச்சிமிக்கதாய் இருந்தது. அ.தி.மு.க.வினரை மாநாடு திகைக்க வைத்தது. அதிர்ச்சியில் மூழ்க வைத்தது. அதன் விளைவு அதே திருச்சியில் 1996 பிப்.8-இல் மாநாடு நடத்தினர். இரண்டு மாநாடுகளை ஒப்பிட்டு மாலை முரசு எழுதியது.**

தேர்தல் ஆணையம் மார்ச் 19-ஆம் தேதி தேர்தல் தேதிகளை அறிவித்துவிட்டது. 1996 - தேர்தல் சட்டமன்ற, நாடாளு மன்றத்திற்கான தேர்தல் தமிழ்நாட்டில் ஏப்ரல் 27, மே 2. புதுவையில் ஏப்ரல் 27, நாடாளு மன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் வாக்குப் பதிவு ஒரே சமயத்தில் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துவிட்டது.

தொடர்ச்சி... நாளை மறுநாள்



வேலூர் மாவட்டம் குடியாத்தம் அரசு மருத்துவமனையில் பிறந்த 10 குழந்தைகளுக்கு, உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக பதவி ஏற்றதை முன்னிட்டு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அர்ச்சனா நவீன் சங்கர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., தங்க மோதிரம் அணிவித்தார். அருகில் குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், நகராட்சி தலைவர் எஸ்.சவுந்தர் ராஜன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.சத்தியமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜி.எஸ்.அரசு, எஸ்.பாண்டியன், குடியாத்தம் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜவகர், பார்த்தீபன், ஹரீஷ் செல்வம்,ஜி.ரிதிக்ராஜ்,எம்.சவுந்தர், ஏ.முகமதுதையுப், முன்னாள் நகர மன்றத் தலைவர் புவியரசி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் பகுதி சாக்குலத்து மெட்டு சாலையில் யானை மிதித்து இறந்த ரங்கசாமி குடும்பத்திற்கு கழகத் தலைவர் – தமிழ்நாடு முதல்வர் நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய் காசோலையை தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தேவாரம் பேரூராட்சி அலுவலகத்தில் இறந்தவரின் மனைவியிடம் வழங்கினார். உடன் தேவாரம் பேரூராட்சி மன்ற சேர்மன் லட்சுமி பால்பாண்டி, உத்தமபாளையம் மேற்கு ஒன்றியச் செயலாளர் குமரன், தேனி தெற்கு மாவட்டப் பொருளாளர் பால்பாண்டி, தேவாரம் பேரூர்க் கழகச் செயலாளர் ஆஞ்சலிஸ் தாஸ், வனத்துறை அதிகாரி ராஜாராம், துணை சேர்மன் கவுன்சிலர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.